அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு தை-மாசி மார்ச் 2017 முரசு 10 ஒலி 117



## வள்ளல் பெருமானாரின் பொன்மொழிகள்

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள்
இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபத்தை
காலமுள்ளபோதே அறிந்து அடைய வேண்டும்.
ஒரு உடல் என்பது அந்த உயிர்
குடியிருக்கும் வீடு என்பதை மறந்துவிடலாகாது.

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

### சிறுவர் சிறுமியர்களுக்கான

# கோடை விடுமுறை சிறப்பு பயிற்சி முகாம்



## இயற்கைச் சூழலில்

## ஏழு நாட்கள்...

**நாள்:**

**மே மாதம்**

**14 முதல் 21 வரை**

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
**வாயுலிங்கம் எதிரில், திருவண்ணாமலை.**

**இந்த பயிற்சி முகாமில்...**

- யோகாசனம்
- பாராயணம்
- ஜீவகாருண்யம்
- உணவுமுறை
- ஒழுக்கநெறி பாடம்
- ஓவியப் பயிற்சி
- நினைவாற்றல் பயிற்சி
- மனோ சக்திக்கான தியான நுட்பங்கள்

போன்ற சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பெற்றோர்கள் கவனத்திற்கு...**

1. பயிற்சியில் கலந்துகொள்ளும் குழந்தைகளை பெற்றோர்கள் மே 14ம் தேதி ஞாயிறு இரவிற்குள் அழைத்துவந்து விட வேண்டும்.

2. 7 முதல் 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மட்டுமே அனுமதி.

2. யோகா செய்வதற்கும், படுப்பதற்கும் 2 பெட்ஷீட் எடுத்து வரவும்

3. குறிப்பு எடுக்க நோட்டு, பேனா எடுத்து வரவும்.

4. பெற்றோர்கள் குழந்தைகளுடன் தங்க அனுமதி இல்லை.

5. பெற்றோர்கள் மே 20 சனிக்கிழமை இரவு வந்துவிடவேண்டும்.

**பயிற்சிக்கான நன்கொடை ரூ.2000/-**

வங்கிக் கணக்கிற்கு பக்கம் எண் 26ஐப் பார்க்கவும்.

**முதலில் பதிவுசெய்யும் 20 நபர்களுக்கு மட்டுமே அனுமதி**

**முன்பதிவிற்கு: 88835 90659, 98654 39998**



# போதநாச விண்ணப்பம்

**ஸ்ரீ** பார்வதிபுரம் என்னும் உத்தரஞானசிதம்பரத் திருப்பதிக் கண்ணே அகிலாதாரமாய் விளங்கும் ஸ்ரீ சமரச வேத சன்மார்க்க சங்கத்துப் பெருந்தலைமைப் பதியாக வீற்றிருந்தருளும் அருட்பெருஞ் சோதியராகிய எமது ஆண்டவனார் திருச்சந்நிதிக்கு யானெனும் போத நாசவந்தனஞ் செய்த விண்ணப்பம்.

எம்மிறையவரே! இது பரியந்தம் யானாகத் தேடியதோர் பொருளென்பதில்லை. ஆகவே, தேவரீர் பெருங்கருணையால் என்னை உய்யக்கொள்ள உபகரித்தருளிய உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் அறியாமையால் யான், எனது என்று கொண்டதோர் சுதந்தரமானது துன்ப, இன்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றி இருந்ததொன்றை யான் பெரும் பொருளாக எண்ணி நின்றனன். ஆதலால், அச்சமரச சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் சமுகத்து நிற்கப்பெற்ற விசேடத்தால் அத்தற்சுதந்தரப் பொருளைத் தேவரீர் பெருங் கருணைச் சந்நிதி முன்னே அர்ப்பித்தனன். இனி, தேவரீர் அதனை அருள் வசமாக்கி ஏழையாகிய என்னையும் என்னையடுத்த சுற்றம் என்னோடு பழகிய நட்பினராதியரையும் உய்யக் கொண்டருளுக.

| | |
|---|---|
| நிலையறியாத குடும்பத் துயரென்னும் நீத்தத்திலே<br>தலையறியாது விழுந்தேனை ஆண்டருள் தானளிப்பாய்<br>அலையறியாத கடலே முக்கண்கொண்ட ஆரமுதே<br>விலையறியாத மணியே விடேல் இதுஎன் விண்ணப்பமே. | திருஅருட்பா |

——திருச்சிற்றம்பலம்——

# குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்

தயவுத்திரு. மு.பா. பாபு அவர்கள், சென்னை.

**இயல்வேத ஆகமங்கள் புராணங்கள் இதிகாசம்**
**இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பர்**
**மயலொருநூல் மாத்திரம்தான் சாலமென அறிந்தார்**
**மகனேநீ நூலனைத்தும் சாலமென அறிக**
**செயலனைத்தும் அருளொளியால் காண்க எனஎனக்கே**
**திருவுளம் பற்றியஞான தேசிக மாமணியே**
**அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே – திருஅருட்பா**

*ஒவ்வொரு ஆன்மாவும் பூரணத்துவத்தை எய்த வேண்டும் என்பது நியதி. ஒவ்வொரு உயிரும் அந்த நிலையை அடைந்தே தீரும். முன்பு இருந்த நிலை அல்லது நினைத்த எண்ணங்களின் விளைவே நாம் இப்போது உள்ள நிலை. எதிர்காலத்தில் நாம் எப்படி இருப்போம் என்பது இப்போது எண்ணும் எண்ணங்களையும், செய்யும் காரியங்களையும் பொறுத்தது.*

*அதனால் நாம் வெளியிலிருந்து உதவி பெற முடியாது என்பதில்லை. ஆன்மா உய்வதற்கான சாத்தியக் கூறுகள் எப்போதும் புற உதவியிலிருந்து விரைவு பெறுகின்றன. எனவே புற உதவி பெரும்பாலோருக்கு ஏறக்குறைய கட்டாயமான தேவையாக இருக்கிறது. விரைவுபடுத்தும் தூண்டுதல்கள் வெளியிலிருந்தே வருகின்றன. அவை நம்மிடம் மறைந்துள்ள ஆற்றல்களில் செயல்படுகின்றன. அதனால் வளர்ச்சி தொடங்குகிறது. ஆன்மீக வாழ்வு பிறக்கின்றது. இறுதியில் மனிதன் புனிதம் அடைகிறான். பூரணத்துவம் எய்துகிறான்.*

**வெளியிலிருந்து வருகின்ற இந்த விரைவுபடுத்தும் தூண்டுதல் நூல்களிலிருந்து கிடைக்க முடியாது. ஓர் ஆன்மாவிற்கு மற்றோர் ஆன்மாவிலிருந்துதான் தூண்டுதல் கிடைக்கும். வேறு எதிலிருந்தும் கிடைக்காது.**

*ஒருவருக்கு கூர்மையான அறிவு வளர்ச்சி இருந்தால் அந்த அளவிற்கு ஆன்மீக வளர்ச்சியும் இருக்கும் என்று ஒருபோதும் சொல்ல முடியாது. மாறாக அறிவு வளரும்போது ஆன்ம வளர்ச்சி தடைபடுவதையே நாம் காண்கிறோம். அறிவை வளர்த்துக்*

*கொள்வதற்கு நாம் நூல்களிலிருந்து உதவி பெறலாம். ஆனால் ஆன்மீக வளர்ச்சிக்கு நூல்களிலிருந்து அநேகமாக ஒன்றும் பெற முடியாது.*

*நூல்களைப் படிக்கும்போது சில வேளைகளில் நாம் ஆன்மீக வளர்ச்சிக்கு ஏதோ உதவி கிடைப்பது போன்றதொரு மனமயக்கம் ஏற்படுகின்றது. ஆராய்ந்து பார்த்தால் நம் அறிவிற்கு உதவி கிடைத்ததே தவிர ஆன்மாவிற்கு அல்ல என்பது தெரியவரும்.*

*அதனால்தான் நம் எல்லோருக்கும் ஆன்மீக விஷயங்களைப் பற்றி வெகு அழகாக பேச முடிகின்றது. ஆனால் நடைமுறை என்று வரும்போது தகுதி குறைந்தவர்களாக இருக்கின்றோம்.*

*இதனின்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? ஆன்மீக வளர்ச்சிக்கு தேவையான தூண்டுதலை நூல்களால் தர முடியாது என்பதுதான். இதனையே நம் வள்ளல் பெருந்தகையும்* **"நூல் அனைத்தும் ஜாலமென அறிக; செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்க"** *என்று அருளியுள்ளார். எனவே ஆன்ம வளர்ச்சிக்கான தூண்டுதல் மற்றொரு ஆன்மாவிலிருந்துதான் வரவேண்டும்.*

**எந்த ஆன்மாவிலிருந்து இந்தத் தூண்டுதல் வருகின்றதோ அவரே குரு. எந்த ஆன்மா தூண்டப்படுகின்றதோ அவரே சீடன்.**

*அறிவு வளர்ச்சியில் நாம் யதார்த்தத்தை இழக்கின்றோம். உதாரணமாக, ஒரு படிப்பறிவில்லாத தந்தை, நன்கு படித்த தன் மகனுடன் ஒரு பயணம் மேற்கொண்டார். அந்தப் பயணத்தின் இரவில் ஒரு கூடாரம் அமைத்து இருவரும் தங்கினர். நல்ல உறக்கம். திடீரென்று தந்தை எழுந்து மகனை எழுப்புகின்றார். 'மகனே மேலே பார்த்து என்ன தெரிகின்றது என்று சொல்' என்றார்.*

*மகனோ 'ஆஹா! லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் தெரிகின்றன' என்றான்.*

*தந்தை மகனிடம் 'இது உனக்கு எதை உணர்த்துகின்றது?' என்று கேட்டார்.*

*மகனும், 'தந்தையே இந்த பிரபஞ்சத்தில் எத்தனை கோள்கள். மிகவும் அருமை' என்றான்.*

*தந்தை மகனை பளார் என்று அறைந்தார். 'முட்டாள்! நம் கூடாரத்தை யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள். அது உனக்கு தெரியவில்லையா?' என்றார். இப்படித்தான் அறிவு நம்மை சிலநேரங்களில் முட்டாளாக மாற்றிவிடும். இதனால்தான் நம் திருவள்ளுவப் பெருந்தகையும் பின் வருமாறு அருளுகின்றார்.*

**கற்றதனால் ஆய பயனென்கொள் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின் — குறள் எண் 2**

*இதனையே நம் வள்ளல் பெருந்தகையும்*

**"கற்கும் முறை கற்றறியேன் கற்பன கற்றறிந்த**
**கருத்தர் திருக்கூட்டத்தில் களித்திருக்க அறியேன்"** *என்றும்*

**மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்**
**மதித்திடான் நின் அடிசீர்**
**மகிழ்கல்வி கற்றிடான்** *என்றும்*

**"கற்றமேலவரொடும் கூடி நில்லேன்**
**கல்வி கற்கும் நெறி தேர்ந்து கல்லேன்**
**கனிவு கொண்டு உனது திருவடியை**
**ஒரு கனவினும் கருதிலேன் நல்லன் அல்லேன்"** *என்றும்*

*அருளியுள்ளார்கள். கல்வி என்றாலே அது நம்மைப் பற்றியும், நம்மையாளும் தலைவனாகிய இறைவனைப் பற்றியும் தெரிவிப்பதேயாகும்.*

*ஆன்மாக்களாகிய நாம் அனைவரும் கற்க வேண்டிய கல்வி ஆன்மீகம். இதுவே ஆன்மாவிற்கு தேவையான கல்வி. அதற்கு நாம் குருட்டினை (அறியாமை இருளை) நீக்கும் குருவினைத் துணைகொள்ள வேண்டும். அவர் அருளிய மார்க்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.*

*உலகியல் கல்வி என்பது நாம் பிழைப்பு நடத்துவதற்காக, பொருளீட்டுவதற்காக மட்டுமே. ஆனால், அதுவே நம் வாழ்க்கை கிடையாது. ஏனென்றால் பொருளினால் நாம் தினமும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பது கண் கண்ட உண்மை. நம் பெருமானாரும் இதையே* **"பொருளால் இருளுரும் எனநான் உளம் நடுங்கியதும் எந்தைநின் திருவுளம் அறியும்"** *என அருளியுள்ளார்.*

*ஆனால் ஆன்மீகக் கல்வி ஒருவரை நிரந்தரமான ஆனந்தத்திற்கு இட்டுச் செல்லும்.*

— தொடரும்...

# சமயத் தெய்வமும் சன்மார்க்க தெய்வமும்

**இராமலிங்கர் பெற்ற இறைவடிவமும் ஐந்தொழில் ஆற்றலும் என்ற நூலில் துறவி கந்தசாமி அவர்கள் அருளியது**

அன்பு உள்ளங்களே! "இப்போது வருகின்ற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லா தேவர்களும், எல்லா கடவுளரும், எல்லா தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி" என்பார் நம் வள்ளல் பெருந்தகை.

அப்படியானால் இதுவரை நாம் வணங்கிக் கொண்டிருக்கும் தெய்வங்களின் நிலை என்ன? இக்கருத்தை நாம் ஏன் விசாரிக்க வேண்டுமெனில் எங்கே எதை நோக்கி செல்கிறோம் என்பது நமக்கு தெரியவேண்டும். "கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்" என்பார் நம் வள்ளல் பெருமானார். இவ்வண்ணம் கூறிய நம் பெருந்தகையே சமயத் தெய்வங்களின் நிலையையும், தனித்தலைமைப் பெரும்பதியாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் நிலையையும் தெளிவாக விளக்கியுள்ளார். இதனையே இங்கே காணவிருக்கிறோம்.

## பிரம்ம தேவன்

ஒருயிர் செய்த நன்மை தீமைகள் யாவும் நியதியென்ற ஏட்டில் பதிந்துவிடும். அந்த ஏட்டிலிருப்பதை அறிந்து நன்மை தீமைகளைச் சீர்தூக்கி, நன்மை அதிகமானால் நற்பிறவியிலும், தீமை அதிகமானால் தாழ்பிறவியிலும் பிறக்க வைக்க 'பிரம்ம தேவர்' என்றொருவர் உண்டாக்கப்பட்டார். இவருக்குத் தலை ஐந்து. அவை ஆணவம், காமியம், மாயை, திரோதை, மாமாயை என்பவைகளாம். இவற்றில் ஆணவம் என்ற ஒரு தலை மட்டும் உருத்திரரால் வெட்டப்பட்டது என்பர். இவர் தொழில் புரிய தனி அண்டங்களும், துணைவியாரும், ஏவலாட்களும் அமைந்தனர். இவரது உடல் ஒருமாற்றுள்ள சுவர்ணதேகம். இவருக்கு வயது 4,32,000. இதற்குமேல் இவர் இருக்கமாட்டார். இவரது பதவியும் முடிந்து, பணியும் முடிந்து இவரும் முடிந்து விடுவார். தீமை அதிகமாகச் செய்த ஒருவனை மன்னித்து நற்பிறவியில் சேர்த்துவிடு என்றால் இவரால் முடியாது. மன்னிக்கும் குணம் இவருக்குக் கிடையாது. நியதி ஏட்டில் உள்ளதற்கு மாறாக இவர் ஏதேனும் செய்தால் இடையிலேயே இவரும் இவரது பதவியும் போய்விடும்.

## நாரணர்

ஆக்கும் தொழிலுக்கு ஒருவர் அமைந்தது போலவே, காக்கும் தொழிலுக்கும் ஒருவர் உண்டானார். அவர் பெயர் நாராயணர். காக்கும்போது கஷ்டம் நேர்ந்தால் அவைகளைத் தீர்க்க, ஆக்கும் பிரமதேவனை நாடாது இவரே ஆக்கிக் கொள்ளவும் முடியும். ஆக காத்தல் ஆக்கல் எனும் இரு தொழில்கள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனாலே இவரது தேகமும் இரண்டு மாற்றுள்ள சுவர்ணதேகம். இவருக்கு வயதும் 8,64,000. இவருக்கும் தொழில் புரியத் தனி அண்டங்கள், துணைவியர், இருக்கை, ஏவலாட்கள் அமைந்தனர். இவரும் இவருக்கிட்ட தொழிலில் இருந்து பிசகாமல் நடக்க வேண்டும். அணுவளவும் பிசகினால் பணியும் போய், பதவியும் போய்விடும். இவரது வயது முடிந்தால் இவரும் போய்விடுவார். இவரது பணியும் போய்விடும்.

## உருத்திரர்

ஆக்கல், காத்தலில் மீறுவோர்களை அடக்க அழிக்க உருத்திரன் என்றொருவர் உண்டாக்கப்பட்டார். அவசியம் ஏற்பட்டால் ஆக்கவும், காக்கவும் இத்துடன் அழித்தல் எனும் முத்தொழில் இவருக்கு தரப்பட்டது. மூன்று தொழில்கள் போலவே இவரது உடல் மூன்று மாற்றுள்ள சுவர்ணதேகம். இவருக்கு வயது 12,96,000. இவருக்கும் பணிபுரிய தனி அண்டங்களும், துணைவியரும், ஏவலாட்களும் அமைந்தனர். இவரும் வயது முடிந்தால் பணியும் முடிந்து பதவியும் முடிந்து இவரும் முடிந்து விடுவார். இவரது பணியிலிருந்து இடையில் அணுவளவு தவறி நடந்தால் உடனே பதவியும், பணியும் போய் இவரும் விலக்கப்படுவர். இந்த உருத்திரனுக்கும் தலை ஐந்து.

## மயேசுரன்

ஆக்கல், காத்தல், அழித்தல்களுக்கிடையே ஏதாவது ஒருயிர் பக்குவம் பெற விரும்பினால் அதற்குப் பக்குவம் தர மயேசுரர் என்றொருவர் உண்டாக்கப்பட்டார். விரும்பிய உயிர்க்குப் பக்குவம் வருவிப்பதிலே சிரமங்கள் ஏற்பட்டால் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் ஆக முத்தொழில்களோடே பக்குவம் வருவிக்கும் தொழிலும் வழங்கப்பட்டது. இவருக்கு நான்கு தொழில் ஆனதினாலே இவருக்கு உடல் நான்கு மாற்றுள்ள சுவர்ணதேகம். இவரின் வயதும் நான்கு பங்கு அதிகம். அதாவது 17,28,000. இவருக்கும் தொழில் புரிய தனி அண்டங்களும், ஏவலாட்களும், இருக்கையும், துணைவியும் அமைந்தனர். இவருக்கிட்ட கட்டளையயன்றி எள்ளலவும்

*மீறினால் இவரும் போய் விடுவார். இவரது பதவியும் போய்விடும். பணியும் போய்விடும்.*

## சதாசிவன்

*பக்குவம் பண்ணுவதிலே ஒருயிர் தேர்வுற்றால் அதற்குத் தக்கவாறு சதாசிவர் என்றொருவர் ஏற்படுத்தப்பட்டார். தக்கது அளிப்பதிலே இவருக்கும் சிரமம் ஏற்பட்டால் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும், பக்குவம் வருவிக்கவும், அருளவும் ஆக தொழில் ஐந்தும் அளிக்கப்பட்டது. இவரது உடல் ஐந்து மாற்றுள்ள சுவர்ணதேகம். இவருக்கு வயது 21,60,000. இவருக்கும் தொழில் புரிய தனி அண்டங்களும், ஏவலாட்களும், இருக்கையும், துணைவியும் அமைந்தனர். இவரும் இட்டபணியிலிருந்து எள்ளளவும் தவறினால் இவரும் போய்விடுவர், இவரது பதவியும் போய்விடும், பணியும் போய்விடும்.*

*இந்த ஐந்தொழில் கர்த்தாக்களைப் பற்றி நம் பெருமானார் கூறும்போது, "உறங்குவதும் விழிப்பதும் பின் உண்ணுவதும் இறத்தல் உறுவதுடன் பிறத்தல் பல பெறுவதுமாய் உழலும் மறங்குலவு அணுக்கள் பலர், செய்த விரதத்தால் மதத்தலைமை பதத்தலைமை வாய்த்தனர்" என்று கூறுவார். இதனை உரைநடைப் பகுதியில் மிகவும் தெளிவாக அருளியுள்ளார்கள். அது என்னவெனில்:*

*"சர்வ சத்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி அணுக்கள் தபசு செய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் பெற்றுக் கொண்ட மூர்த்திகளாகியவர் ஒரு தொழிலுடைய பிரமாவும், இரண்டு சித்தியையுடைய விஷ்ணுவும், மூன்று சித்தியுடைய ருத்திரனும் இதுபோன்ற மற்றையர்களும். மேற்குறித்த மூவரால் ஏற்படுத்திய தத்துவசித்திக் கற்பனைகளாகிய சமய மத மார்க்கங்களை அனுஷ்டித்து, அவர்களையே கர்த்தாக்களாக வணங்கி வழிபாடு செய்துவருகின்ற இது வரையிலுமுள்ள அணுக்கள் மேற்குறித்தவர்களது பதப்பிராப்தியை மேற்படி அணுக்கள் லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களை அசைப்பித்து அனுக்கிரகிக்கும் சர்வ சித்தியையுடைய தனித்தலைமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக்கு உள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியை உடைய கடவுளுக்கு கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கிறார்கள். ஆகவே சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல. மேற்குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து, மேல் படிகள் ஏற வேண்டியவைகளை ஏறிப் பூரண சித்தியை அடையாமல் தடைபட்டு நிற்றல்போல் இங்கு மற்றவர்களை உன்னி அவலமடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவர் உண்டென்றும், அவரை உண்மை அன்பால் வழிபாடு*

செய்து பூரண சித்தியைப் பெற வேண்டுவது சன்மார்க்கக் கொள்கை. மேலும், தனித்தலைவன் லக்ஷியம் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை அல்ல. உபாசனை முதலியவற்றால் வழிபடுதலும் மேற்குறித்த தலைவனைக் குறித்ததே தவிர வேறில்லை" என்கின்றார்.

**தடையுறும் ஐவர் – தடையுறா ஐவர்**

இவர்கள் இருக்குமிடத்தைப் பற்றிக் கூறும்போது, "அடர்மலத் தடையால் தடையுறும் அயன், மால், அரன், மயேசுரன், சதாசிவன், வான்படர் திருவிந்து, பிரணவம், பிரமம், பரைபரம், பரன் எனும் இவர்கள் சுடர் மணிப் பொதுவில் திருநடம் புரியும் துணையடிப் பாதுகைப் புறத்தே இடர் கெட வயங்கும் துகள்" என்று கூறினார். இவர்கள் ஆணவ மலத்தினால் தடையுறுகின்றவர்கள் என்று கூறிவிட்டார்.

"தடையுறா பிரமன், விட்ணு, ருத்திரன், மயேசுரன், சதாசிவன், விந்து, நடையுறா பிரமம், உயர்பராசத்தி, நவில் பரமசிவம் எனும் இவர்கள் இடையறா திருச்சிற்றம்பலத்தாடும் இடதுகால் கடைவிரல் நகத்தின் கடையுறு துகள் என்று அறிந்தனன்" என்கிறார்.

இங்கே இருவகை பஞ்ச கர்த்தாக்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஒருவகையினர் ஆணவமலத் தடையால் தடைபடக் கூடியவர்கள். இவர்கள் இறைவனின் மலர்ப்பாதம் அணிந்திருக்கும் பாதுகையின் புறத்தே இருக்கும் துகள்கள். மற்றொரு வகையினர் மலத்தடை இல்லாத விஷ்ணு, ருத்திரர் முதலானவர்கள். இவர்கள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் இடது காலின் கடைவிரல் நகத்தின் கடைசி துகள்கள்.

எட்டு குணங்களுடனே, கங்கையும், திங்களும், பாம்பும், கபாலமும், சூலமும், கரித்தோலும் உடையவனே சமயத் தெய்வம். உருவம் 4, அருவம் 4, உரு அருவம் 1 ஆக ஒன்பதும் தெய்வமில்லை. இதன் விளக்கத்தைப் பக்கம் எண் 22ல் காண்க. அதுவும் கடந்ததே நமது குலதெய்வம்.

அந்த தெய்வம் எத்தகைய தன்மை கொண்டது எனின்: எல்லாம் உடையதுவாய், எல்லாம் தான் ஆனதுவாய், எல்லாம் தான் அலதாய், எல்லாம் வல்லதுவாய், சொல்லாலும் பொருளாலும் தோன்றும் அறிவாலும் துணிந்தளக்க முடியாததாய் விளங்குபவர். இயற்கை உண்மையரென்றும், இயற்கை அறிவினரென்றும், இயற்கை இன்பினரென்றும், நிர்குணரென்றும், சிற்குணரென்றும், நித்தியரென்றும், சத்தியரென்றும், ஏகரென்றும், அநேகரென்றும், ஆதியரென்றும்,

என்றும், அற்புதரென்றும், நிரதிசயரென்றும், எல்லாம் ஆனவரென்றும், எல்லாம் உடையவரென்றும், எல்லாம் வல்லவரென்றும் குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளால் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித்தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே, நம் வள்ளல் பெருமானார் கண்ட உண்மைக் கடவுளாவார்.

எல்லாச் சத்திகளும், எல்லாச் சத்தர்களும், எல்லாத் தலைவர்களும் அறிந்துகொள்வதற்கு மிகவும் அரியதாய், எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாத் தத்துவிகளுக்கும் அப்பால் அப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தமக்கு ஒருவிதத்தாலும் ஒப்புயர்வு சிறிதும் குறிக்கப்படாத தனிப்பெருந் தலைமையரே சுத்த சன்மார்க்கம் கண்ட தெய்வமாம் அருட்பெருஞ்ஜோதி தெய்வம்.

எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும் மற்றை எல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கம் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும் எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுளே சன்மார்க்கத் தெய்வம். மேலும் நம் பெருமானார் அருட்பெருஞ்ஜோதி என்ற வார்த்தைக்கு விளக்கம் கொடுக்கும்போது "பெரிய தயவுடைய அறிவு; ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவு" என்று கூறுவார்.

இதுவரை வந்த சமயத் தெய்வங்களெல்லாம் சிலகாலம் இருப்பார்கள் பின் இறந்துபடுவர். ஆனால் இந்த சன்மார்க்க தெய்வம் பொய்யாத தெய்வம்; இடர் செய்யாத தெய்வம்.

மேலும் "இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயாகாரிகளாகிய சித்தர்கள் மறைத்துவிட்டார்கள். சுத்த மாயாகாரியாகிய தெரிந்த பெரியோர்களும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்திருந்தால் அனுபவித்தறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம்" என்று நம் பெருமானார் பேருபதேசத்தில் அருளியுள்ளார்.

எனவே சன்மார்க்கத்தில் மட்டுமே உண்மை தெய்வத்தின் உண்மையை தெளிவாக, வெளிப்படையாக அருளப்பட்டுள்ளது. அத்தெய்வத்தை உண்மை அன்பால் வழிபாடு செய்து பயம், துன்பம் நீங்கி வாழ்வில் எல்லா நலமும் வளமும் பெற்று பேரின்ப வாழ்வு வாழ்வோமாக!

**ஐந்தொழில் ஆதிசெய் ஐவர் ஆதிகளை**
**ஐந்தொழிலாதி செய் அருட்பெருஞ்ஜோதி - அகவல் (863-64)**

# மூத்தோர்சொல் அமிர்தம்

ஒருமுறை அதிக புண்ணியம் செய்த ஒருவர் சொர்க்கத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருந்தார். அதேசமயம் அவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு குறைவாக புண்ணியம் செய்த ஒருவனும் சொர்க்கத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருந்தான். முதலாமவருக்கு இவனைப் பற்றி நன்றாகத் தெரியும். ஒரே ஊர்காரரர்கள். இரண்டு பேரும் ஒரே நாளில் இறந்து போனார்கள்.

கதவுகள் திறந்தன. சொர்க்கத்தின் வாயிற் காப்பாளர் கதவைத் திறந்து குறைந்த புண்ணியம் செய்தவனை வரவேற்றார். இதனைக் கண்டதும் அதிகப் புண்ணியம் செய்தவருக்கோ வருத்தம். அவனை சொர்க்கத்தில் வரவேற்பார்கள் என்று இவர் எதிர்பார்க்கவே இல்லை.

வாயிற் காப்பாளனைப் பார்த்து "இது என்ன? இப்படியா என்னை அவமானப்படுத்துவது? என்னைவிட புண்ணியம் குறைவாகச் செய்தவனை வரவேற்று என்னை உதாசீனம் செய்வது ஏன்?" என்று கேட்டார்.

அதற்கு வாயிற்காப்பாளர், "நீ எதிர்பார்க்கிறாய். அவனிடம் எதிர்பார்ப்பில்லை. சொர்க்கத்திற்கு வந்து சேர்ந்துவிட்டேனே என்ற நன்றியுணர்வுதான் அவனிடம் இருக்கிறது. நீயோ அதிக புண்ணியம் செய்துவிட்டதால் சொர்க்கத்தை சம்பாதித்துவிட்டதாக நினைக்கிறாய். அவன் கடவுளின் கருணையை உணர்கிறான். நீயோ உன் முயற்சியால் சொர்க்கத்திற்கு வந்துவிட்டதாக நினைக்கிறாய். உனக்கு அது ஒரு சாதனையாகத் தெரிகிறது. சாதனை என்ற நினைப்பே அகங்காரத்தின் வடிவம்தான். அவன் பணிவாக இருக்கிறான். தான் சொர்க்கத்திற்கு வந்து சேர்ந்திருப்பதை அவனால் நம்பவே முடியவில்லை" என்றார்.

**இசைத்திடவும் நினைத்திடவும் பெரிதரிதாம்**
**தனித்தலைமை இறைவா உன்றன்**
**நசைத்திடு பேரருட் செயலால் அசைவதன்றி**
**ஐந்தொழில் செய் நாதராலும்**
**தசைத்திடுபுன் துரும்பினையும் அகங்கரித்து**
**தங்கள் சுதந்தரத்தால் இங்கே**
**அசைத்திடற்கு முடியாதேல் அந்தோ**
**இச்சிறியேனால் ஆவது என்னே. – திருஅருட்பா**

**ஆனந்தம் என்பது சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களைத் திருப்தியால் சந்தோஷிப்பித்து தான் அதிசயமின்றி நிற்றல். – வசனபாகம்**

**Advertisement**


மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகவும்.

திரு. நந்தி சரவணன் ஐயா 9842679999 / 9442327059

BNS eXS Lending Library
Computer Solutions

Why should you invest on IT infrastructure when we are here for YOU.!

IT Products & Services

Exchange & Maintenance
Sales & Service
Rental
1000+ Happy Customers

Library

Any Branch Access
Online Payment
Corporate Service
Door Delivery Service

Contact

eXS Lending Library

Plot No 184,Lakshmi Nagar
1st Main Road Porur
Chennai-600116

Phone: 2476 3199, 4507 2474
MOBILE NO:9444 408 804




திருவருள் துணையுடன்

BEYONDEX

Solutions Private Limited
Agro Chemicals
Cools
Network Solutions
Lending Library

| PORUR | OMR | IYYAPPANTHANGAL | VALASARAVAKKAM | VADAPALANI |
|---|---|---|---|---|
| 4210 7304 | 4286 3478 | 24761495 | 4210 5700 | 42642491 |

www.books2myhome.com , govee@books2myhome.com



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

*மரம் முந்தியா? விதை முந்தியா? என்றொரு வினா. இதைப்போலவே கோழி முந்தியா? முட்டை முந்தியா? என்றொரு வினா. விதை இல்லாமல் மரம் உண்டாகாது. மரம் இல்லாமல் விதை கிடைக்காது. முதல் விதை எங்கிருந்து வந்தது? முதல் விதை மரம் இல்லாமல் தானாகவே உண்டாகியிருக்க வேண்டும். விதையின் கரு முதன் முதலில் விதை ஏதும் இன்றித் தானே தோன்றிற்று. அக்கருவே விதையாக, முதல் தாவரம் தோன்றிற்று. தாவர இனங்கள் வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து விதைகள் பரவின, பலவாயின.*

*இறையாற்றல் வித்து இல்லாமலே விளைவு செய்ய வல்லது.* **'விச்சதின்றியே விளைவு செய்குவாய்'** *என்கிறார் மணிவாசகர். முதல்விதை, விதையின் கருவாக, விதையின் கூறாக இறையருளால் தானே தோன்றி விளைந்தது.* **தாவர விதைகளையும் விளைவையும் போன்றது தான் தத்துவ விதைகளும் தத்துவ விளைவுகளும்.**

*அண்டங்களும் அவற்றிலுள்ள பண்டங்களும், பிண்டமும் (உடம்பும்) அதிலுள்ள அனைத்தும் தத்துவ வித்துக்களின் விளைவே. பஞ்சபூதங்கள் சேர்ந்து உலகம் உண்டாயிற்று. உடம்புகள் உண்டாயின. உலகத்துப் பொருள்கள் அனைத்தும் உண்டாயின. பஞ்சபூதங்கள் தோன்றுவதற்கு விதை எது? தன்மாத்திரைகள். தன்மாத்திரைகளுக்கு விதை எது? மூலப்பிரகிருதி, மாயை. உடம்பு உண்டாவதற்கு, சுக்கில சுரோணிதங்கள் மனித இனத்தின் விதை. தாவர வித்துகள் உவமானம். தத்துவவித்துகள் உவமேயம்.*

**வித்தியல் ஒன்றாய் விளைவியல் பலவா 629**
**அத்தகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி 630**

| | | |
|---|---|---|
| *வித்தியல்* | – | *வித்தின்(விதையின்) இயல்பு* |
| *ஒன்றாய்* | – | *ஒன்றாக* |
| *விளைவியல்* | – | *அவ்வித்து விளையும் இயல்பு, விளைந்து பயன்தரும் விளைவுகள்* |
| *பலவா* | – | *பலவாக* |
| *அத்தகை அமைத்த* | – | *அவ்வாறு அமைத்தருளிய* |
| *அருட்பெருஞ்ஜோதி* | – | *அருட்பெருஞ்ஜோதி* |

*வித்தின் இயல்பு ஒன்றாக, அது விளைந்து பயன்தரும் இயல்புகள் பலவாக அருட்பெருஞ்ஜோதியே அமைத்துள்ளது.*

*ஒருமூட்டை விதைநெல்லை விதைக்கிறோம். ஒன்று பலவாக, ஆயிரமாக விளைகிறது. ஆயிரக்கணக்கான மூட்டை நெல் விளைந்து அறுவடையாகிப் பயன் தருகிறது.* **நம்முடைய எண்ணங்களெல்லாம் விதைகளே. நம்முடைய செயல்களெல்லாம் விதைகளே.**

*ஒரு நல்ல காரியம் (நல்வினை) செய்கிறோம். அதன் பயன் பெரும் புண்ணியமாய் விளைகிறது. ஒரு தீமை (தீவினை) செய்கிறோம். அதன் பயன் பெரும் பாவமாய் விளைகிறது. நாம் செய்யும் நல்வினை தீவினைகள் விதைகள். புண்ணிய பாவங்கள் அதன் விளைவுகள். இவ்வாறே ஏனையவும் கண்டு கொள்க.*

**வித்தியல் ஒன்று, விளைவியல் பல விதை ஒன்று, விளைவுகள் பல.**

**விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க 631**
**அளவுசெய் தமைத்த அருட்பெருஞ்ஜோதி 632**

*விளைவியல் அனைத்தும் – விளையும் திறன் முழுமையும்*
*வித்திடை அடங்க – விதையில் அடங்கியிருக்குமாறு*
*அளவுசெய்தமைத்த – அளவு செய்து அமைத்தருளிய*
*அருட்பெருஞ்ஜோதி – அருட்பெருஞ்ஜோதி*

*மிகப் பெரிய விளைவியல், மிகுதியான விளைவியல் ஒரு சிறிய விதையில் அடங்கியிருக்கும் படியாக அருட்பெருஞ்ஜோதி அளவு செய்து அமைத்திருக்கிறது. ஆலம்விதை மிகச் சிறியது. அது முளைத்து, வளர்ந்து, கிளைபரப்பி, விழுது வீழ்ந்து, மிகப் பெரிய மரமாக, ஆயிரக்கணக்கான ஆலம்பழத்துடன், பல்லாயிரம் ஆல விதையுடன் விளைந்து பயன் தருகிறது.*

*ஆலமரத்தின் இலைகள், கிளைகள், விழுதுகள், வேர்கள், காய்கள், பழங்கள், விதைகள் ஆகிய அனைத்தும் விதைத்த ஒரு விதையில் அடங்கியிருந்து வெளிப்பட்டுள்ளன. விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்கியிருப்பதென்பது இது தான். ஒரு சிறு சுக்கிலத் துளி, ஒரு சிறு சுரோணிதத்துளி ஒன்றுகூடி உடம்பாக, அதன் புற உறுப்புகளாக, உள்ளுறுப்புகளாக இவற்றின் பயன்களாக விளைகிறது. உடலமைப்புக்குரிய அவ்வளவும் சுக்கில சுரோணிதச் சிறுதுளியில் அடங்கியிருப்பதென்பது இதுதான்.*

*விதை நன்றாக இருந்தால் விளைச்சலும் நன்றாக இருக்கும். விதை சாவி போனதாக இருந்தால் விளைச்சலும் சாவி போகும். சோடையாம். எல்லா நெல்லும் விதை நெல் ஆகா. முற்றிய மணிகளே, தேர்ந்த மணிகளே விதை நெல்லாகும் தகுதி உடையன.*

**——திருச்சிற்றம்பலம்——**

# உள்ளது உரைத்தல்
# பேருபதேசம்

***ஸ்ரீமுக வருஷம், ஐப்பசி மாதம், 7ஆம் நாள், புதவாரம், பகல் 8 மணிக்கு, மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதன் முதலில் கொடி கட்டினவுடனே நடந்த நிகழ்ச்சியின் குறிப்பு.***

*இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேல் ஏற்றியிருக்கின்றார். எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர்களானால், என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கி விட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கி விடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில்; அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாரென்று வாசகப் பெரு விண்ணப்பத்திலும், "தேடியதுண்டு நினதுருவுண்மை" என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும் விண்ணப்பித்திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில்.* **"கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக"** *என்றதுதான். என்னை ஏறாநிலைமிசை யேற்றி விட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணை தான் என்னைத் தூக்கி விட்டது.*

*அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால்தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடன் இருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படி யிருந்தாலும், அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டன் விழுந்து சொல்லுவேன்; பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்; அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்து விடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும்.* – வசனபாகம்

*திருச்சிற்றம்பலம்*



# தன்னையறிந்து இன்பமுறு

**தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.**

**முக்திநெறி என்ற நூலிலிருந்து...**

*உலகத்தில் பல கோட்பாடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு மார்க்கத்திலும் மனிதன் மோக்ஷம் பெறுவதற்கு என்னென்ன வழிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது.*

*சிலர் வைகுண்டத்திற்கு சென்று பகவானான மகாவிஷ்ணுவின் பாதங்களில் இருந்துவிட்டால் அதுதான் மோக்ஷம் என்று கூறுவர். ஆனால் வைகுண்டம் போவதற்கு எத்தனை பேர் தயாராக இருக்கிறார்கள்? யாரும் தயாராக இருப்பதில்லை. அதுபோல் ஒருவரும் கைலாசத்திற்கு போகவும் தயாராக இல்லை. ஆனால் வேதாந்தத்தில், 'இங்கேயே பரம்பொருளை அடைகிறான்' என்று கூறப்பட்ட வகையில் இங்கே ஒருவனுக்கு மோக்ஷம் இருக்கிறது. இதைக் கேட்ட அனைவருக்கும் இந்த சாஸ்திரத்தை கட்டாயமாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஏற்படும்.*

*ஏனென்றால் வேறு எங்கும் போக வேண்டாம், இங்கேயே உட்கார்ந்து கொண்டு மோக்ஷம் பெறலாம் என்றால் அனைவருக்கும் அதில் விருப்பம் இருக்கும். வெளியில் போக வேண்டும் என்றால்தான் பயமே ஏற்படும். இங்கேயே இருக்க வேண்டுமானால் ஒரு விதமான தைரியம் மனதில் ஏற்பட்டு விடுகிறது. ஒருவனை வேலை விஷயமாக வேறு ஊருக்குச் செல்ல நாம் கட்டளையிட்டால் அவன், ''ஐயய்யோ, மற்றவர்களெல்லாம் இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் நான் கவனிக்க வேண்டுமே" என்றெல்லாம் கூறுவான். அதேசமயம் "இங்கேயே இருந்து நீ வேலையை பார்த்துக் கொள்ளலாம்" என்றால் மிகவும் சந்தோஷமாக இருந்து கொள்வான். ஏனென்றால் இங்கேயே இருந்து அவனுக்குப் பழகிவிட்டது.*

*அதேபோல் இந்தப் பிறவியிலேயே பரம்பொருளை அடைகிறான் என்று வேதத்தில் கூறப்பட்டிருப்பது அத்வைத வேதாந்தத்தில் உள்ள ஒரு சிறிய சுவாரஸ்யமாகும். இப்போது "அதை எவ்வாறு அடைவது?" என்பது கேள்வி.*

*அதை அடைவது ஒரு நோக்கிலிருந்து பார்த்தால் மிகவும் சுலபமானது. இன்னொரு நோக்கிலிருந்து பார்த்தால் அது மிகவும் கஷ்டமானது. விவேகம் முதலிய அதிகார சம்பத்துக்கள் இருந்தால் அதை அடைவது மிக சுலபமாகும். அத்தகைய அதிகார சம்பத்துக்கள் இல்லாவிட்டால் அதை இப்போது அடைவது மிகவும் கடினமான ஒன்றாகும்.*

*நமக்கு முன்னே வைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தைப் பற்றி விரிவாகக் கேட்டாலும் அது எவ்வாறு வார்த்தைகளை எல்லாம் பதிவு செய்து கொள்கிறது என்பதைப்பற்றி கேட்டாலும் நமக்கு ஒன்றும் கூறத் தெரியாது. மற்றவர் கூறினாலும் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் ரேடியோ இஞ்ஜினீயரிங் என்ற படிப்பு படித்தவரிடம் கேட்டால் “ஆம் வேறு இயந்திரத்தைக் காட்டிலும் இதற்கு ஒரு சிறப்பு உண்டு. இந்த சர்க்யூட் நல்ல முறையில் செய்யப்பட்டிருக்கின்றது. இதைச் செய்தவன் மிகவும் புத்திசாலி” என்றெல்லாம் பாராட்டிக் கூறுவார். ஏனென்றால் அத்தகையவர்க்கு அதை தெரிவிப்பதற்கான தகுதி இருக்கிறது.*

*தகுதியே இல்லாத ஒருவன் இதைப் பார்த்தால், “இந்தப் பெட்டி மிகவும் அழகாக இருக்கிறது. இது பார்ப்பதற்கு பளபளவென்று இருக்கிறது. முள் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது” என்பான். இவ்வளவு சொல்லிவிட்டால் அவனுக்குப் போதும். அதற்குமேல் அவனுக்கு ஏதாவது சொன்னால் அவனது தலையில் ஒன்றுமே ஏறாது.*

*இத்தகைய சாதாரணமான ஒரு விஷயத்திலேயே நிலைமை இவ்வாறு இருக்கும்போது, ‘காண்பதற்கு அரியவனும், உள்ளே மறைந்துள்ளவனும், உடல் மற்றும் புலன்களுக்கு அப்பாற்பட்டு விளங்குபவனுமான பழமையான தேவனை; அந்த பரம்பொருளை சிந்திப்பதற்கே அரிது.’* **அத்தகைய பரம்பொருளை காண வேண்டுமானால் மனதை வெளிப் பொருட்களிலிருந்து திருப்பி ஆத்மாவில் ஒருமுகப்படுத்தி தியானம் செய்வதன் மூலமே இது சாத்தியம்.**

*இதனால் என்ன பயன்? அந்தர்முக யோகம் செய்த ஒருவன் கர்மம் செய்து ஒன்றைப் பெறுதலும், செய்யாது எதையாவது இழத்தலும் என்பதில்லை. ஏதாவதொரு பொருளை நாடி உயிர்களை சார்ந்திருப்பதும் அவனுக்கு இல்லை என்று வேதத்தில் உள்ளதால் ஒருவன் மகிழ்ச்சியையும், துன்பத்தையும் கடந்து போய்விடலாம்.*

*இதனையே நம் திருமூலர் தம்முடைய திருமந்திர நூலில் மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார்.*

**தன்னை அறியாது தாம் நல்லார் என்னாது இங்கு**
**இன்மை அறியாது இளையர் என்று ஓராது**
**வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னம்**
**தன்மையும் நல்ல தவம் செய்யும் நீரே. 422**

*அதாவது, எமன் ஓர் உயிரைப் பிடிக்க வரும்பொழுது தன் சொந்த உணர்ச்சிக்கு இடம் கொடான். எவ்வுயிர் நல்லவராக இருந்தது என எண்ணான். வறியவராய் வாழ்ந்தமையால் இன்னும் சிலநாள் செல்வம் ஈட்டி வாழ்க என விட்டுவையான். இளைய வயதாயிற்றே நன்கு வாழ்க என விடான். கல்மனத்துடன் வந்து பிடிப்பான். அவன் வருமுன் செய்யத்தக்கது நல்ல தவமே என்று அருளியுள்ளார்.*

*இங்கு சிலர் ஒரு கேள்வியை எழுப்புவர். "சந்தோஷத்தையும் விட்டுவிடுவோம், துக்கத்தையும் விட்டுவிடுவோம் என்பதில் துக்கத்தை மட்டும் விட்டுவிடுவோம் என்றால் பரவாயில்லை. சந்தோஷத்தையும் விட்டுவிடுவோம் என்றால் அது கேட்பதற்கே நன்றாக இல்லையே! சந்தோஷம் பெறுவதற்காக அல்லவா இதையே நாம் நாடுகின்றோம்" என்பதுதான் அந்தக் கேள்வி.*

*மேலும் "பரம ஞானம் அடைவதற்குமுன் பாயாசம் சாப்பிட்டால் மகிழ்ச்சியாக இருக்கும்; ஏதோ ஒரு சினிமா பார்த்தால் மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் பிரம்ம ஞானம் அடைந்த பின் எல்லாம் போய்விடுமே" என்ற எண்ணமும் எழும்.*

*ஆனால் உண்மையில் இத்தகைய மகிழ்ச்சிகளும் ஒருவனை விட்டு நீங்க வேண்டியதுதான்.*

*இது எப்படியென்றால், ஒருவனுக்கு ஒரு வேலையின் மூலமாக ரூபாய் ஐம்பது சம்பளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. அதிர்ஷ்டவசமாக வேறொரு இடத்தில் அவனுக்கு ஐநூறு ரூபாய்க்கு வேலை ஒன்று கிடைத்தது. அந்த வேலை கிடைத்தவுடன், "ஐயய்யோ, ஐம்பது ரூபாய் சம்பளம் போய்விட்டதே" என்று வருந்தினால் எப்படி இருக்கும்? ஐம்பது ரூபாய் போனால் என்ன? அந்த ஐம்பது ரூபாயும் இந்த ஐநூறுக்குள் அடக்கமல்லவோ! அதேபோல் ஆயிரம் ரூபாய் சம்பளம் வந்தவுடன் முன்பு வாங்கிக்கொண்டிருந்த ஐநூறு ரூபாய் சம்பளத்தைப் பற்றி யாராவது கவலைப்படுவானோ? அந்த ஆயிரம் ரூபாய்க்குள் ஐநூறு ரூபாய் அடக்கமல்லவோ! ஆகவே முன்பு கிடைத்த சந்தோஷத்திற்காக யாராவது அழுவதுண்டா!*

ஒருவன் எப்படிப்பட்ட மகிழ்ச்சியை வேண்டுகிறான் என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். ஏதாவது ஒரு வேலையில் சேர நினைக்கும் பொழுது தனக்கு தற்காலிகமான வேலை கிடைக்க வேண்டுமென்று விரும்புவானா? யாரைக் கேட்டாலும் "ஐநூறு ரூபாய்க்கான தற்காலிக உத்யோகம் வந்தாலும் வேண்டாம்; நிலையான உத்யோகம் இருநூற்று ஐம்பதுக்கு கிடைத்தால் அதுவே போதும்" என்றுதான் சொல்லுவான்.

ஏனென்றால் தற்காலிகமான வேலையிலிருந்து எப்பொழுது நீக்கிவிடுவார்களோ என்பது தெரியாது. இரண்டு மாதம் கழித்து, வீட்டிற்கு போ என்றால் என்ன செய்வது? இருநூற்று ஐம்பது ரூபாய்கூட கையில் இல்லாமல் போய்விடும். ஆகவே நிலையாக இருக்கும் வேலைதான் சிறந்தது என்று அனைவரும் கருதுவர். ஆன்மாவை அறிந்தவர்களுடைய மகிழ்ச்சி எப்படிப்பட்ட மகிழ்ச்சி என்றால் அது நிலையான மகிழ்ச்சி. இதனையே நம் திருமூல நாயனார்

**தன்னையறிய தனக்கொரு கேடு இல்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே. 2328**

நம் வள்ளல் பெருந்தகையும்

**தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே**
**ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே**

என்று அருளியுள்ளார்.

வெளிஉலக பொருட்களை நாம் அளவிற்கு அதிகமாக அனுபவிக்கும்போது அதனால் நமக்கு ஆபத்து விளைகின்றது. ஆனால் மனதை ஆத்மாவில் லயிக்கச் செய்து அனுபவிக்கும் ஆத்மானந்தத்தை எவ்வளவு அதிகமாக அனுபவித்தாலும் அதனால் நமக்கு துன்பம் என்பது அணுவளவும் வராது.

எனவே தன்னையறியும் தவநெறியை நாம் அனைவரும் மேற்கொண்டு நித்தியமான சுகபூரண பெருவாழ்வை அடைந்து உய்வோமாக!

**..தன்னையறிதல்..**

**தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் கூடஸ்தனையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.**

**- வள்ளலார்**

**——திருச்சிற்றம்பலம்——**

# திருமந்திரத் தேன்

**ஆதாரம் ஆதேயம் ஆகின்ற விந்துவும்**
**மேதாதி நாதமும் மீதே விரிந்தன**
**ஆதார விந்து அதிபீட நாதமே**
**போதா இலிங்கப் புணர்ச்சி அதுஆமே. – விந்து; நாத சேர்க்கை**

*விந்து ஆதாரம்; தாங்குவது. நாதம் ஆதேயம்; தாங்கப்படுவது. சந்திர மண்டலத்தின் கலைகளாகிய மேதை முதலான பதினாறுடன் இணைந்து யோகிக்கு உடம்பில் அனுபவமாகின்ற நாதம் இங்கே குறிக்கப்பட்டது. விந்து பீடமாய் (ஆவுடையாய்) அமைய, நாதமாகிய பாணம் அதன் மேல் அமைகின்றது. விந்து நாதங்களின் சேர்க்கையே இலிங்கம். விந்து புள்ளி வடிவானது. நாதம் தண்டத்தின் (கோல்) வடிவானது. ஆன்மா 'சிவோகம் பாவனை' செய்து, சிவமும் தானும் வேறல்ல என்ற நிலையில் சிவத்தினை அனுபவிக்கும்போது விந்து, நாதம் இரண்டும் அனுபவப்படும். பின்னர் பரவிந்து, பரநாதம் இரண்டும் அனுபவப்படும். பரம் என்ற நிலையில் விந்து, நாதங்கள் அடுக்கடுக்காக அனுபவப்படும். ஆதலின் இவ்விரண்டும் ஒவ்வொரு முறையில் ஆதாரம், ஆதேயம் என்னும் இரண்டாகவும் இருக்கும். இது பற்றியே "ஆதாரம் ஆதேயம் ஆகின்ற விந்துவும் நாதமும் மீதே விரிந்தன" என்றார். ஆன்மா "தானே சிவம்" என அனுபவித்தலின் ஆன்மலிங்கம் ஆயிற்று.*

**அன்று நின்றான் கிடந்தான் அவன் என்று**
**சென்று நின்று எண்டிசை ஏத்துவர் தேவர்கள்;**
**என்றும் நின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை**
**ஒன்றி என் உள்ளத்தின் உள்ளிருந்தானே. –யாத்திரை செல்வதில்லை**

*தேவர்கள் எம்பிரானை, 'அன்று அங்கு நின்றான், இன்று இங்கு கிடந்தான்' என்று ஏதேனும் ஓர் இடம், உருவம், காலம் பற்றி எல்லாத் திசைக்கும் சென்று வழிபடுவர். யானோ, என் உயிருணர்வில் பொருந்தி மனத்தினின்றும் நீங்காதிருக்கும் அப்பெருமானை என்றும் யான் இருந்த இடத்திலிருந்தே வழிபடுகின்றேன்.*

**தொழில் அறிவாளர் சுருதி கண்ணாகப்**
**பழுது அறியாத பரம குருவை**
**வழி அறிவார் நல்வழி அறிவாளர்**
**அழிவு அறிவார் மற்றை அல்லாதவரே. – பக்குவன்**

*ஞானம் வழங்கும் செய்கையை நன்கு அறிந்தவரும், வேதமே தமக்குக் கண்ணாக (வழிகாட்டியாக) அமைய, குற்றமற்ற வாழ்வை நடத்துபவருமாகிய மேலான குருவை வழிபட அறிந்தோரே வாழும் வழியை அறிந்தோர். பிறர் அழியும் வழியை உடையோரே.*

**——திருச்சிற்றம்பலம்——**

# பாடலும் பொருளும்

**உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற**
**உருஅருவம் ஒன்றும் இவை உடன்மேல் உற்ற**
**ஒருநான்கும் இவைகடந்த ஒன்றுமாய்அவ்**
**வொன்றின் நடுவாய் நடுவுள் ஒன்றாய் நின்றே**
**இருநான்கும் அமைந்தவரை நான்கினோடும்**
**எண்ணான்கின் மேலிருத்தும் இறையே மாயைக்**
**கருநான்கும் பொருள்நான்கும் காட்டு முக்கண்**
**கடவுளே கடவுளர்கள் கருதுந் தேவே – மகாதேவமாலை (57)**

*இறைவனை யார் யார் எப்படி எப்படி அறிகின்றார்களோ அப்படியெல்லாம் விளங்குவதாக வள்ளலார் கூறுகின்றார். அவரது வார்த்தையாகவே சொல்வதென்றால் "அறிவார் அறியும் வண்ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றான்". இந்த மகாதேவ மாலை பாடலிலும் அதே கருத்தைத் தான் கூறுகின்றார்.*

*பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், மகேசுவரன் ஆகிய நான்கும் உரு நான்காகும். மேலும் நவநிலை அனுபவத்தை வள்ளல் பெருமான் கீழே விளக்கியுள்ளார்.*

*1. விந்து, 2.நாதம், 3.பரவிந்து, 4.பரநாதம், 5.திக்கிராந்தம், 6.அதிக்கிராந்தம், 7.சம்மேளனம், 8.சுத்தம், 9.அதீதம்.*

**அரு நான்கு** *என்பவை* **விந்து, நாதம், பரவிந்து, பரநாதம்** *எனக்கொள்ளலாம். நடுவே நின்ற* **உருஅருவம் சதாசிவ** *அனுபவமாகும்.* **இவை மேலுற்ற ஒரு நான்கு திக்கிராந்தம், அதிக்கிராந்தம் சம்மேளனம், சுத்தம்** *ஆகின்றன.* **இவை கடந்த ஒன்றாய் விளங்குவது அதீதம்** *என்பது* **இறை அனுபவம்.** *இந்த அனுபவம் எப்படி இருக்கும். முதலில் அண்ட பகிரண்டம் தோற்றறியாப் பெருஞ்ஜோதி காட்சியாகும். பின்னர் அதன் நடுவே பொன்னொளி தோன்றும். முடிவாக அப்பொன்னொளியின் நடுவே செவ்வொளி தோன்றும். முதலில் கூறப்பட்ட பேரொளியும் பொன்னொளியும் காட்சிகளேயெனில் முடிவானத் தோற்றமாகிய செவ்வொளியே இறைவன் எனப்படுவது. இதுவே உடம்பில் கலப்பது. இதைத்தான்* **அதீத நிலை** *என்றார். இந்த நிலை அனுபவம் ஏற்பட்டவுடன் அந்த அனுபவசாலி இறைவன் ஆகிவிடுகின்றான். கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் என்பதும் இதுவே. இந்தப் பாடலில் 'இவை கடந்த ஒன்றுமாய், அவ்வொன்றின் நடுவாய், நடுவுள் ஒன்றாய் நின்றே' என்றார்.*

*முச்சுடராக இறைவன் மனிதனுக்குள்ளே அனுபவமாய் விளங்குவதை வள்ளலார் குறிப்பிடுகின்றார்.*

*அப்படி விளங்கும் இறைவன் யாரைக் கரையேற்றுகின்றான்?*

*சிவகுணங்களாகிய எட்டு குணங்களும் யாருக்கு அமைகின்றதோ அவர்களை முப்பத்தாறு தத்துவங்கட்கும் மேலாக நிறுத்துகின்றான். சிவகுணங்களாவன:*

*1.தன் வயத்தனாதல், 2.தூய உடம்பினனாதல், 3.இயற்கை உணர்வினனாதல், 4.முற்றும் உணர்தல், 5.இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், 6.பேரருளுடைமை, 7.முடிவில் ஆற்றலுடைமை, 8.வரம்பிலின்பமுடைமை ஆகும்.*

*இறைவன் இந்த எட்டு குணங்களை உடையவர்களை மட்டுமே தத்துவங்கள் கடந்த மேனிலையில் நிறுத்துவானாம். 'இரு நான்கும் அமைந்தவரை நான்கினொரு எண்ணான்கின் மேலிருத்தும் இறையே' என்றார். ஜீவன்கள் பிறவியெடுப்பதை நான்கு வகையாய் விளக்குகின்றார். 'பாரிடை வேர்வினில் பையிடை முட்டையில் ஆருயிர் அமைக்கும் அருட்பெருஞ்ஜோதி' என்பர். அதாவது பூமியில் தாவரங்கள் விளைகின்றன. உணி, பேன் போன்ற ஜீவன்கள் வியர்வைகளில் தோன்றுகின்றன. மூன்றாவதாக கருப்பையில் உயிர்கள் தோன்றுகின்றன. நான்காவதாக முட்டையிலிருந்து பிறக்கின்றன. இப்பிறவிகட்கெல்லாம் மாயையே காரணமாய் இருப்பதால் மாயைக்கரு நான்கு என்றார். இந்த ஜீவன்களுக்குத் தேவையான தனு, கரண, புவன, போகங்களை அறிவிப்பவனாக இறைவன் இருக்கின்றான். பிறவிகள் நான்கு வகை – அப்பிறவிகட்கு வேண்டிய பொருட்களோ நான்கு. இந்நான்கு பொருட்களையும் மூன்று கண்களை உடையவனாகிய இறைவனே நீயே காட்டுகின்றாய். ஓது கடவுள் கூட்டம் அனைத்தும் அடிமை அல்லவோ என்பார் – கடவுள் கூட்டம் எல்லாம் வணங்கும் கடவுளே – தேவர்கட்கெல்லாம் தேவனே – எவர்க்கும் பெரியவராய் விளங்கும் கடவுளர் கருதும் தேவே என்று விளக்குகின்றார்.*

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

நமது வள்ளல் பெருமானார் அன்பர்களுக்கு
வரைந்தருளிய திருமுகக் குறிப்பிலிருந்து

## ஆயிரம் பணக்காரர்களை அரைநிமிடத்தில் அதிட்டிக்கலாம்

ஸ்ரீரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு அம்பலவாணர் அனுக்கிரகத்தினால் தீர்க்காயுளும் சிவக்யானமும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

தமது சுப விபவங்களும், திருவேங்கடமுதலியார் சுப சரித்திரங்களும் அடிக்கடி கேட்க விரும்புகிறேன். இங்ஙனம் யானும் நாயக்கரவர்களும் க்ஷேமம். தாம் முன்னர் எழுதிய கடிதமும் பின்னர் எழுதிய கடிதமும் அதன் பின்னர் பங்கியில் வரவிடுத்த வத்திரமும் அது அது வரத்தக்க காலங்களில் வரக்கண்டு கொண்டேன்.


வருத்தம் பாராது வரவிடுத்த ஒரு பீசும் ஒன்பது லக்ஷம் பீசுகளாகக் கொண்டேன். இதுவே அமையும். இனி வருத்தம் எடுத்துக் கொள்ள வேண்டாம். பின்பு பார்த்துக் கொள்ளலாம். இதுவன்றி என் பொருட்டு வேறு வகைகளாலும் பிரயாசமெடுத்துக் கொள்ள வேண்டாம். தாம் மாத்திரம் க்ஷேமமாக சிவானுக்கிரகத்தால் சலிப்பற நெடுங்காலம் வாழ்வுற நான் கண்டு களிப்பதே எனக்கு போதுமான திருப்தி. இது உண்மை உண்மை.

நான் சிலகாலம் சென்று அவ்விடம் வருவதற்கு எண்ணம் கொண்டிருக்கிறேன். ஆனால் எமது ஆண்டவன் திருவுள்ளம் எவ்வண்ணமோ தெரிந்ததில்லை. ஆயினும், நான் அங்ஙனம் வருவதற்குள் தாம் இங்ஙனம் வருவதற்குக் கூடுமான காலம் நேரிடின் தாம் வரவும். நான் காணவும் ஆவலுள்ளவனாகவே இருக்கின்றேன். கூடுமான காலம் நேராவிடில் வரவேண்டுவ தில்லை. நான் வந்து காண்கிறேன். அன்றி தாம் சாக்கிரதையாக இந்த தேகத்தை உபசரித்து வரவேண்டும். வரவுக்கு தக்க செலவு செய்ய வேண்டும். இனி விசேடமான அலுவல் நேரிடுகிற பரியந்தம் இப்போது நேரிட்டிருக்கின்ற அலுவலைப் பார்த்து வரவேண்டும்.

என் எண்ணத்தின்படி ஆண்டவர் விரைவில் தமக்கு விசேஷ சவுக்கியத்தை உண்டுபண்ணுவார் என்கிற நம்பிக்கையை உடையவனாய் இருக்கிறேன். தாம் இடைவிடாது பரமசிவமே பொருளெனக் கொண்டு பஞ்சாக்கிரத்தையே சிந்தித்து வரவேண்டும்.

**நான் ள-ள சோமு செட்டியார்க்கு கடிதம் எழுதவே மாட்டேன். அவர் கல்யாணத்திற்கு எனக்கொரு கடிதம் எழுதினார். அதற்குப் பதிலாகவும், அவர் அன்பை சோதிக்கும் பொருட்டாகவுமே எழுதி தம்மாற் கண்டு கொண்டது. இவரைப்போல் ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம்.**

*நமக்கு இவர்களெல்லாம் ஒருதிரணமாகத் தோற்றுகின்றார்கள். இவர்கள் லக்ஷியம் வேண்டுவதில்லை. நாம் சிவபெருமான் திருவடிகளுக்கு அடிமையானோம். நமக்கு ஒரு விதத்தாலும் குறைவில்லை. இது உண்மை சிரஞ்சீவி சிரஞ்சீவி.*



—திருச்சிற்றம்பலம்—

## விருப்பு வெறுப்பு

**விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள்:**


*விருப்பென்பது யாதெனின் ஒன்றை வேண்டிப் பந்தப்பட்டு பூரண லக்ஷியத்தை விட்டு அதிசயமாகப் பார்த்து நிற்றல். இந்த விருப்பால் தானும் கெட்டு இதர வஸ்துவும் கெட்டு சாதனமும் தடைபட்டுவிடும். ஆதலால் எவ்வகையிலும் விருப்பென்பது கூடாது.*

*வெறுப்பென்பது யாதெனின், வேண்டாமை; துவேஷம்; இதர வஸ்துவைப் பற்றாதிருத்தல். இந்த வெறுப்பால் இதர வஸ்துவிடத்தில் துவேஷம் தோன்றி ஜீவ உபகாரத்தைத் தடை செய்யும். ஆகையால் வெறுப்பும் கூடாது. மேற்குறித்த இரண்டும் அற்று சத்துவமயமாய் நிற்றல் வேண்டும்.* - வசனபாகம்.


## *மாதப்பூச ஜோதி தரிசனம், வடலூர்*

*வருவார் அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே*
*வந்தால் பெறலாம் நல்ல வரமே - வள்ளலார்.*

| | | |
|---|---|---|
| 05-04-2017 | புதன் | மாதப்பூசம் |
| 21-04-2017 | வெள்ளி | அகவல் நாள் |
| 02-05-2017 | செவ்வாய் | மாதப்பூசம் |
| 25-05-2017 | வியாழன் | தருமசாலை துவக்கநாள் |



# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். ***தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.***

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| **காலை உணவிற்கு** | **- ரூ.2,500/-** |
| **மதிய உணவிற்கு** | **- ரூ.6,500/-** |
| **இரவு உணவிற்கு** | **- ரூ.3,500/-** |
| **பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு** | **- ரூ.4,000/-** |
| **பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு)** | **- ரூ.2,500/-** |
| **அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு)** | **- 15 லிட்டர்** |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:** **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048** **IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு பாபு சாது

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, **வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,**

**கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,**

**திருஅண்ணாமலை -** *606 604.*

*செல்:* +91 9443489849, +91 9942776351

*அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-*

*செல்:* **8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி




அருள்விளக்கே அருட்சுடரே அருட்ஜோதி சிவமே
அருள்அமுதே அருள்நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடம்கொண்ட பதியே
என்னறிவே என்னுயிரே எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருளளித்த திருவாளா ஞான உருவாளா
தெய்வநடத்து அரசே நான் செய்மொழி ஏற்றருளே.

– திருஅருட்பா

**நாள்: 26-3-2017, ஞாயிற்றுக் கிழமை**
**இடம்: ஸ்ரீ ராஜராஜேஸ்வரி மஹால்**
**7/4 செட்டித் தெரு,**
**திருவண்ணாமலை.**

**தொடர்புக்கு: +91 8675343171, 8883590659**

## நிகழ்நிரல்

- அகவல் பாராயணம்
- கூட்டு பிரார்த்தனை
- நினைத்தாலே முத்தி - சிறப்பு சத்சங்கம்
  – தயவுதிரு. மு.பா. பாபு அவர்கள் சென்னை.
- ஜோதி தியானம்

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது




அனைவரும் வருக!
அருள் நலம் பெறுக!



அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly March 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

நாள்: 26-3-2017, ஞாயிற்றுக் கிழமை

இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- திறக்கப் பாடிய சதுரர் - சிறப்பு சத்சங்கம்
  தயவுத்திரு. சாது சந்தானம் அவர்கள், சென்னை.
- கூட்டு பிரார்த்தனை
- ஜோதி தியானம்

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: +91 99651 50531, +91 9443489849


திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865